வ.உ.சி.யின்

துன்பத்தின் கற்பனை



செ.திவான்

வ.உ.சி.யின் துன்பத்தின் கற்பனை

தொகுப்பாசிரியர்

செ.திவான்.எம்.ஏ.,எம்.ஃபில்.,

நஜாத் பதிப்பகம்
106 எப் 5. திருவனந்தபுரம் சாலை
பாளையங்கோட்டை 627002

✆(0462)72665

முதற்பதிப்பு : ஜனவரி 1996
விலை ரூ : ஏழு

அச்சிட்டோர் : *ஸ்வர்ணப்ரியா ஆப்செட் பிரிண்டர்ஸ்*
பாளையங்கோட்டை.
✆(0462) 72144

சமர்ப்பணம்

தமிழ் மீது தணியாத ஆர்வத்துடனும் திருக்குறள் மீது தீராத பற்றுடனும். கொள்கைகளையும் இலட்சியங்களையும் இதயத்திலே தாங்கி வாழ்ந்து மறைந்த போற்றுதலுக்குரிய பண்புநிறை பெரியார், மறுமலர்ச்சி தி.மு.கழகத்தின் பொதுச் செயலாளர் கண்ணியத்திற்குரிய அண்ணுச்சி திருமிகு **வை.கோபால்சாமி**,எம்.பி. அவர்களின் தந்தையார் பெரியவர் **வையாபுரி நாயக்கர்** அவர்களுக்கு.

நன்றி

வ.உ.சி.யின் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு நூல் வடிவில் வெளிவர எனக்கு உதவிய மறுமலர்ச்சி தி.மு.கழகத்தின் மாநில கலைத்துறைச் செயலாளர் போற்றுதலுக்குரிய பண்பாளர் பாசத்திற்குரிய அண்ணன் **கலைப்புலி எஸ். தாணு** அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றி.

செ. திவான்.

தொகுப்புரை

எண்ண அலைகள்

உலகின் மகத்தான மனிதராக, இலட்சிய நடைபோட்டு வரலாற்றில் மறைக்க இயலாத, மறுக்க இயலாத சுவடுகளைப் பதிப்பித்தவர் வீரத்தலைவர் வ.உ.சி.

'மனிதன் பிறக்கின்றான். இறக்கின்றான் இருக்கின்ற சில நாளில் சிறக்கின்ற வகையில் அவன் செயலாற்றக் கருவியாக உள்ளது அவனது சிந்தனை. சிந்தனை வானில் தோன்றுகின்ற நினைவு எல்லாம் ஒளிமயமாக வடிவம் கொடுத்துப் படைத் தால்தான் அதன் அழகை எழிலை ஆகர்ஷணசக்தியை இந்த அவனி உணர்ந்து தெரிந்து போற்றி உய்ய முடியும். பற்பல சிந்தனைகள் பல வித நிலைகளில் கற்பனைச் சிறகோட்டி விற்பனை கருத்து ஏற்றி உற்பத்தியாவதுஉண்டு. பிறக்கின்ற எல்லாக் குழந்தைகளும் பெருமை தன்னைப் பெறுவதில்லை. அதுபோன்று சிந்தனையில் தோன்றுகிற கருத்துக்கள் யாவும் செழுமையாக, செம்மையாக செவ்வானில் துருவ நட்சத்திரமாக மாறி நிற்பதில்லை.

வரலாற்று மனிதர்கள் வடித்திட்ட சிந்தனைகள் இன்று வாழ்வின் நூலாக வளம் சேர்த்து நம் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு திகழ்கின்றன. இவ்வழியில் எண்ணத்தக்க வண்ணச் சிந்தனைகள் வாழ்ந்த இதயம் கொண்ட சிதம்பரனார் தந்து நின்ற நூல்கள் பல தரணிக்குப் பெருமை தந்து நிற்கின்றன'*

வ.உ.சி எழுதிய, மொழிபெயர்த்த, உரை எழுதிய, பதிப்பித்த நூல்களும் பல; அதுபோல் அச்சில் வராத நூல்களும், நூல் வடிவாகத்

---

* தி.நெ. வள்ளி நாயகம், செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார் 1985 பக் 105.

தொகுக்கப்படாத கட்டுரைகளும் பல. காலகதியில் இவைகள் மறைந்தும் வருகின்றன.

வ.உ.சி.கட்டுரைகள்

இந்நிலையில் 198 ஆம் ஆண்டின் இறுதியில் திரு. மா.ரா.அரசு அவர்கள் **வ.உ.சி. கட்டுரைகள்** என்ற நூலை வெளியிட்டார்கள்.

கடவுளும் பக்தியும்	(விவேக பாநு 1900 செப்டம்பர்)
விதி அல்லது ஊழ்	(விவேகபாநு 1900 அக்டோபர்)
ஈகை	(விவேகபாநு 1900 டிசம்பர்)
கடவுள் ஒருவரே	(விவேக பாநு 1901 பிப்ரவரி)
சுதேசாபிமானம்	(விவேக பாநு 1906 பிப்ரவரி)
சுதேசஸ்டீமர் விக்ஞாபனம்	(விவேக பாநு 1906 ஆகஸ்ட்-நவம்பர்)
மனிதனும் அறிவும்	(ஞானபாநு★ 1913 ஏப்ரல்)
மனமும் உடம்பும்	(ஞானபாநு 1913 மே)
வினையும் விதியும்	(ஞானபாநு 1913 ஜுன்)
தமிழ் எழுத்துக்கள்	(ஞானபாநு 1915 செப்டம்பர்)
தமிழ்	(சுதேசமித்திரன் 29.10.1915)
தமிழ் நூல்கள்	(சுதேசமித்திரன் 1918ஆம் வருஷ அநுபந்தம்)
திருவள்ளுவர்	(தமிழ்ப்பொழில் 1929-30)
திருக்குறள்	
”	(தமிழ்ப்பொழில் 1930-31)

★ தேச பக்தச்செம்மல் வீரமுரசு சுப்பிரமணிய சிவா அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளி வந்த இதழ்.

சிவஞானபோதம் ஆறாஞ் சூத்திர ஆராய்ச்சி(தினமணி 6.12.1935) ஆகிய வ.உ.சி. எழுதிய பதினைந்து கட்டுரைகள் அடங்கிய நூல் அது.

வ.உ.சி. எழுதிய எண்ணற்ற கட்டுரைகள் இன்னும் அறியப்படாமலும் வெளிவராமலும் இருந்துவருகிறது.

1935 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வெளிவந்த தூத்துக்குடி 'கால்டுவெல்ஹைஸ்கூல்மாகஸைன்' பத்திரிகையில் கடவுளைப் பற்றிய ஒரு வினா ' எனும் தலைப்பில் வ.உ.சி.ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இதனைப்போன்று அரிய அற்புதக் கருத்துக்கள் அடங்கிய பல கட்டுரைகள் காலகதியில் மறைந்து கிடக்கின்றன.

வரலாற்று ஆய்வு மாணவன் என்ற முறையில் இவைகளைத் தேடிடும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறேன்.

திரு. மா. ரா. அரக அவர்கள் தனது நூலில் பதிப்பித்த வ.உ.சி.யின் பதினைந்து கட்டுரைகள் நீங்கலாக, எனது தேடலின் போது மேலும் இரண்டுகட்டுரைகள் எனக்கு கிடைத்தன.

1930 ஆம் ஆண்டு ஜுலை மாதம் உத்தமபாளையத்திலிருந்து வெளிவந்த ***பாரதி*** என்ற இதழில் '**தோலும் நிறமும்**' என்ற அற்புதமான கட்டுரையை வ.உ.சி. எழுதியிருக்கிறார்கள்.

'நமது மாணவர்கள் கல்வியை ஆவலுடனும் ஊக்கத்துடனும் கற்பதற்கு முதற்காரணம் பாடபுத்தகங்களேயாகும். இரண்டாவது அப்பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்கள் ஆவார்கள். ஆதலாற் புதிய முறையிற் பல பாடபுத்தகங்கள் தமிழில் வெளிவரவேண்டியது இன்றியமையாததொன்று' என்று கல்வித்துறையில் உழைத்து வரும் பலர் கருதுகின்றனர். இக்கருத்துடனேயே **தமிழ்ப்பாடத்தொகை** என்னும் பெயருடன் ஒன்று, இரண்டு,மூன்று, நான்கு, ஐந்தாம் என்

தரங்களுக்கு ஏற்ப முறையே முதற்பாகம், இரண்டாம் பாகம், மூன்றாம் பாகம், நான்காம்பாகம், ஐந்தாம்பாகம் என ஐந்து புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. இப்புத்தகங்களுக்கு தங்களுடைய சிறந்த உரைநடைப்பாடங்களைக் கொடுத்துதவிய அறிஞர்கருக்கு எனது நன்றியறிதலையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின் றேன்' என்ற முன்னுரையுடன் தஞ்சை ஜில்லா ராஜமடம் போர்டு நடுத்தரக் கலாசாலைத் தமிழாசிரியர் **சாமி.சிதம்பரனார்** அவர்கள் எழுதிய தமிழ்ப்பாடத் தொகை ஐந்தாம் பாகம் நூல் 1930இல் மதுரை.**இ.மா.கோபாலகிருஷ்ணக்கோன்** இவர்களால் வெளியிடப் பட்டது. கரந்தை தமிழ்ச்சங்கத்தலைவர், திரு.**த.வே.உமா மகேசுவரன்**, மதுரை அமெரிக்கன் கல்லூரி தமிழ்விரிவுரையாளர் **ஆ.கார்மேகக்கோனார்** ஐயம்பேட்டை B.H.ஸ்கூல் தலைமை ஆசிரியர் திரு.M.**சோமசுந்தரம்பிள்ளை**,**மறைமலையடிகள்**,**இராமலிங்கசுவாமிகள்** ஆகியஅறிஞர் பெருமக்களின் கட்டுரைகள் இடம்பெற்றுள்ள பாடநூலில் மூன்றாவது கட்டுரையாக **துன்பத்தின் கற்பனை** கோயிற்பட்டி வக்கீல் **வ.உ.சிதம்பரம்பிள்ளை** எழுதியது என்று குறிப்பிடப்பட்டு வெளிவந்திருக்கிறது.

17.1.1936 'தினமணி'யில் **உலகமும் கடவுளும்** என்ற வ.உ.சியின் கட்டுரை வெளிவந்திருக்கிறது. தினமணி வைரவிழா ஆண்டுமலரில் 1994இல் அக்கட்டுரை மறுபிரசுரம் செய்யப் பட்டிருக்கிறது

துன்பத்தின் கற்பனை (தமிழ்ப்பாடத்தொகை ஐந்தாம் பாகம் 1930 மார்ச்)

தோலும் நிறமும்(பாரதி 1930 ஜுலை)

உலகமும் கடவுளும் (தினமணி 17.1.1936) ஆகிய வ.உ.சியின் மூன்று கட்டுரைகளையும் மா.ரா அரசு அவர்களின் வழிநின்று வ.உ.சியின் **துன்பத்தின் கற்பனை** என்ற சிறுநூலாகத் தொகுத்து வெளியிட்டுள்ளேன்.

வாழ்விற்கு அடிப்படையாக அமைந்த கண்ணியத்திற் குரிய அண்ணாச்சி மறுமலர்ச்சி தி.மு. கழகப்பொதுச்செயலாளர் திருமிகு.**வை.கோபால்சாமி** எம்.பி. அவர்களுக்கும் அவர்களின் வழிநடக்கும் நெல்லை கட்டபொம்மன் மாவட்டச்செயலாளர் **டி.ஏ.கே.இலக்குமணன்** அவர்களுக்கும் உற்றுழி உதவும் நற்றகை யாளர் குட்டி (எ) C.A.R.சண்முகசிதம்பரம் அவர்களுக்கும், சொற்செல்வர்அண்ணுச்சி திரு.சி.சு.மணி, பேராசிரியர் டாக்டர் கே.சதாசிவன், பேராசிரியர் தொ. பரமசிவன், பேராசிரியை சகோதரி வி.ஜெயபாரதி, பேராசிரியர்.சி.என்.சிதம்பரநாதன், பேராசிரியர். அ.நரசிம்மன், பேராசிரியர்.கா.மாணிக்கம், தென்காசி அண்ணன் சி. இராசாமுகம்மது, எனது மைத்துனர் டாக்டர் S.M.A.Q.ஜெயிலானி எனது துணைவியார் டாக்டர் திவானி ஜஹானரா, அண்ணன் ரயில்வே ஐ. சாமுவேல், மாமா ரோஹிணி பி.நாராயணன், சகோதரர் கள் பங்களாசுரண்டை D.V.தங்கசாமி பாளை மு. அருணுசலம், பாளை திரவியம்பிள்ளை, அம்பை மாமா சு.முத்துசுவாமி, பாடகர் G.S.அபுபக்கர். அச்சன்புதூர் அண்ணன் M.M.அசன்மரைக்காயர், டாக்டர் ஹாஜி S.M அசன் இப்ராஹிம், எனது புதல்விகள், தி.நஜாத், தி.சுஹைனா எனது சகோதரர்கள் செ. இஸ்மாயில்கனி, செ.இப்ராகிம் ஆகியோருக்கும் நல்ல முறையில் அச்சிட்டுத்தந்த ஸ்வர்ணப்பிரியா அச்சகத்தாருக்கும் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

காலம் எனக்கு அளித்த இந்த பெரும் வாய்ப்பை பெரும் பேறாகக் கருதுகிறேன். தொடர்ந்து இதுபோன்ற நூல்களை வெளியி டும் பாக்கியத்தை எனக்கு வழங்கிட இறைவனைப்பிரார்த்திக்கிறேன்.

22.9.95.

கல்வித்தந்தை **செ. திவான்.**

A.S.சுலைமான் இல்லம்

பாளையங்கோட்டை

துன்பத்தின்கற்பனை.

கவலையும் துன்பமும், துக்கமும் வாழ்க்கையின் சாயைகள். உலகம் முழுவதிலும் கவலையால் கலங்காத உயிரே இல்லை,துன்பத்தால் துடியாத மனமே இல்லை; துக்கத்தால் துளியாத கண்ணே இல்லை. உலகத்தில் பிணியும் மரணமும் ஆகிய எமதூதரால் உயிர்க்கு உயிராகிய உறவினர் பிரிக்கப் பட்டுத் துக்கமாகிய இருட் போர்வையால் மூடப்படாத குடும்பம் இல்லை. வலியதாகவும், எளிதில் அறுக்கமுடியாததாகவும் தோன்றுகிற தீமை வலையில் சகல மனிதரும் முன்னர்ச்சிக்கிப்பின்னர்க் கவலையாலும், துன்பத்தாலும், துக்கத்தாலும் வருந்துகின்றனர்.

இவ்வருத்தத்திலிருந்து தப்புதற்காகப் புருஷர்களும்; ஸ்திரீ களும் எண்ணிறந்து உபாயங்களைச் செய்கின்றனர். எண்ணிறந்த மார்க்கங்களிற் பிரவேசிக்கின்றனர்; அவற்றால் அழிவில்லாத ஓர் சுகத்தை அடையலாமென்று நம்புகின்றனர். சிலர் மதுபானஞ்செய்தும் விபசாரஞ்செய்தும் திரிகின்றனர்; சிலர் உலகக் குழுவை விட்டு நீங்கித் தனித்த ஓர் இடத்தை அடைந்து, தம்மைச்சுற்றிப் பலபோக்கியப் பொருள்களை அமைத்துக்கொண்டு வசிக்கின்றனர்;சிலர் பொரு ளையோ புகழையோ அவாவி, அவற்றை அடைதற்காக மற்றைய எல்லாவற்றையும் கீழ்ப்படுத்துகின்றனர்; சிலர் மதசம்மந்தமான பல சடங்குகளைச் செய்து அவற்றில் திருப்தியடைகின்றனர்.

அவாவிய சுகம் எல்லோருக்கும் கிடைப்பதுபோலத் தோற்றுகின்றது;ஆன்மா சிறிதுகாலம் துன்பத்தை மறந்து இன்பத்துள் களிக்கின்றது. ஆனால், கடைசியில் ஒருநாள் ஒரு பெரும் நோயோ, துக்கமோ, கவற்சியோ, கேடோ தன்னைப் பலப்படுத்திக்கொள்ளாத ஆன்மாவைத் திடீரெனத் தாக்குகின்றது. ஆன்மா அதுவரை கொண்டிருந்த இன்பம் சிதறுண்டுபோகின்றது. அப்படியே ஞானத்தால் தன்னைப் பலப்படுத்திக்கொள்ளாத மனிதனுடைய

ஆன்மாவின்மீது எந்த நிமிஷத்திலும் விழுந்து அதனை வருத்தி அழித்து விடத்தக்க ஒரு கூரியவாள் ஒவ்வொரு பொறியின்பத்தின் தலைமீதும் தொங்கிக்கொண்டிருக்கின்றது.

குழந்தையானது குமரன் அல்லது குமரியாவதற்கு அழுகின்றது; குமரனும் குமரியும் தமது கழிந்த குழந்தைப் பருவத்தை நினைத்துப் பெருமூச்சு எறிகின்றனர். எளிய மனிதன் தனது வறுமை விலங்கால் வருந்துகின்றான்; வலிய மனிதன் தன்பால் வறுமை வந்துவிடுமோ என்ற அச்சத்தால் வருந்துகின்றான். அல்லது தான் சுகமெனக் கருதுகின்ற நிலையற்ற ஒரு சாயையை அடைவதற்காக உலகத்தை வருத்துகின்றான். சில வேளைகளில் ஆன்மா ஒருமதத்தைத் தழுவுவதாலோ, ஒரு மனோதத்துவ சாஸ்திரத்தைக் கற்பதாலோ, ஒரு மனக்கொள்கையை அல்லது தொழிற் கொள்கையை அநுசரிப்பதாலோ தான் நிலையுள்ளஅமைதியையும் சுகத்தையும் அடைந்துவிட்டதாகக் கருதுகின்றது. ஆனால் விலக்க முடியாத ஓர் ஆபத்து அம்மதத்தைத் தகுதியற்றதாக்கி விடுகின்றது; அத்தத்துவ சாஸ்திரத்தைத் தகர்த்து விடுகிறது. பலவருஷங்களாக வருந்திக் கைக்கொண்ட அக்கொள்கையை ஒரு நிமிஷத்தில் தூள்தூளாக்கி விடுகின்றது.

அப்படியானால் துன்பத்திலிருந்தும் துக்கத்திலிருந்தும் தப்பு வதற்கு மார்க்கம் இல்லையா? தீமைகளின் கட்டுகளை அறுப்பதற்கு உபாயங்கள் இல்லையா? ஸ்தரமான அமைதியும் நிலையுள்ள செல்வமும் நித்திய சுகமும் வெறுங் கனவுகளா? இல்லை. ஒரு மார்க்கம் இருக்கிறது; அதனால் தீமையைவேரோடு களைந்து விடலாம். ஓர் உபாயம் இருக்கிறது; அதனால் பிணியையும் வறுமை யையும் மற்றைய பிரதிகூல நிலைமைகளையும், சந்தர்ப்பங்களையும் அடியோடு நீக்கிவிடலாம். ஒரு முயற்சி இருக்கின்றது; அதனால் வறுமை வருமோ என்ற அச்சமே உண்டாகாத ஸ்திரமான செல் வத்தை அடையலாம். ஓர் அப்பியாசம் இருக்கின்றது; அதனால்

முடிவும்; அழிவும் இல்லாத அமைதியையும் சுகத்தையும் அடையலாம்.

இப்பெரும்பேற்றை அடையச் செய்யும் மார்க்கத்தின் தொடக்கம் துன்பத்தின் தன்மையைச் சரியாக அறிதலேயாம்.

துன்பத்தை வெறுத்தலோ கவனியாதிருத்தலோ போதாது; அதனை அறியவேண்டும். துன்பத்தை நீக்கும்படி கடவுளைப் பிரார்த்தித்தல் போதாது; அஃது எதன் பொருட்டு வந்திருக்கிற தென்றும் அஃது எதனைஉங்களுக்குக் கற்பிக்க நிற்கிறதென்றும் நீங்கள் அறியவேண்டும். உங்களைப் பந்தப்படுத்துகிற விலங்கு களைப் பார்தது நீங்கள் பெருமூச்சு விடுவதாலும் சத்தமிடுவதாலும் அழுவதாலும் யாதொரு பயனுமில்லை; அவை எதற்காக உங்களைப் பந்தப்படுத்தி யிருக்கின்றனவென்றும், அவை எவ்வாறு உங்களைப் பந்தப்படுத்தியிருக்கின்றனவென்றும் நீங்கள் அறியவேண்டும். ஆதலால் நண்பர்களே! நீங்கள் உங்களுக்கு அந்நியராக நின்றுகொண்டு, நீங்கள் உங்களை ஆராய்ந்தறிதற்குத் தொடங்க வேண்டும், அநுபவம் என்னும் கலாசாலையில் நீங்கள் கீழ்ப் படிதலில்லாத மாணவராயிருப்பதை விட்டு, நீங்கள் பணிவோடும் பொறுமையோடும் உங்கள் அபிவிர்த்திக்கும் பூரண தத்துவத்திற்கும் அத்துன்பம்கொண்டிருக்கும் பாடங்களைக் கற்கத் தொடங்க வேண்டும். ஏனெனில்; துன்பமானது சரியாக அறியப்பட்ட காலையில் அது பிரபஞ்சத்தில் அளவற்ற ஒரு சக்தி யன்றென்றும், தத்தவ மன்றென்றும், ஆனால் கழிந்துபோகக்கூடிய ஒரு மனித அனுபவமென்றும் தெரியவரும்; ஆதலால், துன்பமானதுகற்க விரும்புகிறவர்களுக்கு ஓர் ஆசிரியன்போல உதவுகின்றது. துன்பமானதுஉங்களுக்குப் புறத்திலுள்ள ஒரு பொருளன்று; அஃது உங்கள் அகத்தின் ஓர் அநுபவம்; நீங்கள் உங்கள் அகத்தைப் பொறுமையோடு ஆராய்ந்துபார்த்து ஒழுங்குபடுத்துவதால் நீங்கள் துன்பத்தின் மூலத்தையும் தன்மையையும் இன்னின்ன

அனுபவமென்று நாளடைவில் காண்பீர்கள்; பின்னர் அஃது உங்களை விட்டு அறவே நீங்கிவிடும்.

ஒவ்வொரு துன்பத்தையும் திருத்தலும் பரிகரித்தலும் கூடும்; ஆதலால் அது நிலையில்லாதது. அது பொருள்களின் உண்மையான இயற்கையையும் சம்பந்தத்தையும் அறியாத அஞ்ஞானத்தில் வேரூன்றி இருக்கிறது; அவ்வஞ்ஞான நிலைமையில் நாம் இருக்குங் காலமெல்லாம் நாம் துன்பத்திற்கே ஆளாயிருக்கிறோம். பிரபஞ்சத்தி லுள்ள சகல துன்பங்களும் அஞ்ஞானத்தின் காரியங்கள்; அவற்றின் கற்பனைகளை நாம் கற்றுக்கொள்வதற்கு விருப்பமுடையவராகவும் தயாராகவும் இருப்போமானல், அவை நம்மை முற்றிலும் உயர்ந்த அறிவாளிகளாக்கிவிட்டு நீங்கிவிடும். ஆனால் மனிதர் எப்பொழு தும் துன்பத்தில் இருக்கின்றனர்; அஃதுஅவரைவிட்டு நீங்கு வதில்லை; ஏனெனில் அஃதுஅவருக்குக் கற்பிக்கக்கொண்டிருக்கும் பாடங்களை அவர் கற்பதற்குத் தயாராகவும் விருப்பமுடைய வராகவும் இல்லை. யான் ஒரு குழந்தையை அறிவேன். அதன் தாய் அதனை இராக்காலத்தில் படுக்கைக்குக் கொண்டு போன போதெல்லாம் எரிகின்ற மெழுகுவர்த்தியுடன் அது விளையாட விரும்பி அழுவதுண்டு. ஓர் இரவில் தாய் வெளியிற்போயிருந்த சமயத்தில் குழந்தை மெழுகுவர்த்தியைக்கையில் எடுத்தது. அதுகுழந்தையின் கையைச் சுட்டுவிட்டது; அக்காலம் முதற்கொண்டு அக்குழந்தை மெழுகுவர்த்தியுடன் விளையாட ஒருபோதும் விரும்பியதில்லை. அது தனது ஒரு மடச் செய்கையினால் பெற்றோர் வார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்றபாடத்தைப் பூர்த்தியாகப் படித்துக்கொண்டது; நெருப்புச் சுடுமென்ற ஞானத்தையும் அடைந்துவிட்டது. சகல துன்பங்களுடைய இயல்புகளையும் நோக்கங்களையும் முடிவுகளையும் பூர்த்தியாக விளக்குவதற்கு இவ்வொரு சம்பவமே போது மானது. குழந்தை நெருப்பின் உண்மையான இயல்பை அறியாத அஞ்ஞானத்தால் வருந்தியது

போலப் பெரிய குழந்தைகளாகிய மனிதர்; தாம் அடைந்தபோது தனக்கு வருத்தத்தைக் கொடுக்கும் பொருள்களின் உண்மையான இயல்புகளை அறியாத தமது அஞ்ஞானத்தால் அவற்றை அடைய அவாவியும் அழுதும் அடைந்து வருகின்றனர். இரண்டிற்கும் ஒரே ஒரு வேற்றுமைதான் உண்டு; சிறிய குழந்தைகளின் அஞ்ஞானத்தை விடப்பெரிய குழந்தைகளாகிய மனிதரின் அஞ்ஞானமும் துன்பமும் அதிக ஆழத்தில் வேரூன்றியனவாகவும் எளிதில் நீக்க முடியாதனவாகவும் இருக்கின்றன.

நன்மைக்கு ஒளியையும் தீமைக்கு இருளையும் உபமானங் களாகக் கூறுகின்றனர். இவ்வுபமானங்கள் நன்மைதீமை களுடைய முழு அர்த்தத்தையும் உண்மையையும் விளக்கத்தக்கவை. ஒளி பிரபஞ்சமெல்லாம் விளக்கும் சூரியனது உண்மைத் தோற்றம். அதுபோல, நன்மை பிரபஞ்சமெல்லாம் பரவிஉயிர்களைக்காக்கும் மெய்ப்பொருளினது உண்மைத் தோற்றம். இருள் சூரியனது ஒளியின் ஒரு பாகத்தை மறைக்கும் பூமியின் நிழலாகிய இன்மைப் பொருள். அது போல், தீமை மெய்ப் பொருளினது நன்மையின் ஒரு பாகத்தை மறைக்கும் ஜீவனது நிழலாகிய இன்மைப் பொருள். இரவு தனதுகறுப்புப்போர்வையால் நமது பூமியின் ஒரு பாகத்தை மாத்திரம் மறைக்கிறது; அதன் மற்றைய பாகங்களிலெல்லாம் ஒளி விளங்கிக் கொண்டிருக்கிறது. அதுபோல, அஞ்ஞானம் தனது கேடும் துன்பமும் துக்கமுமாகிய கறுப்புப் போர்வையால் மெய்ப்பொருளின் ஒரு பாகத்தை மாத்திரம் மறைக்கிறது; அதன் மற்றைய பாகங்களிலெல் லாம் ஆக்கமும் இன்பமும் சுகமும் விளங்கிக் கொண்டிருக்கின்றன. ஒளிமயமான சூரியனைப்பூமி மறைப்பதால் அஃது இருளால் மூடப்படுகின்றது. அப்படியே ஞான மயமான மெய்ப் பொருளை ஜீவன் மறைப்பதால் ஜீவன் அஞ்ஞானத்தால் மூடப்படுகின்றது. இருளால் மூடப்பட்ட புவியினர்கள் நல்ல வழியையும் தீயவழியையும் அறியமாட்டாது தீய வழியில் சென்று இடர்ப்

படுகின்றனர். அவ்வாறே, அஞ்ஞானத்தல் மூடப்பட்ட ஜீவர்கள் நன்மையையும் தீமையையும் பகுத்தறிய மாட்டாது தீமையைப் புரிந்து கேட்டையும் துன்பத்தையும் துக்கத்தையும் அடைந்து வருந்துகின்றனர். இரவின் இருளையடைந்தே பகலின் ஒளிக்குச் செல்லவேண்டும். ஆனால், சிலர் துன்பத்தின் வழியாகச் செல்வானேன்?' என்று வினவல் கூடும். அஞ்ஞானத்தால் நீங்கள் அவ்வழியிற் பிரவேசித்திருக்கிறீர்கள்; நீங்கள் அவ்வழியாகச் செல்வதானால் இன்பத்தின் பெருமையை நன்கு அறிவீர்கள். இருள் வழியாகச் செல்பவர் ஒளியின் பெருமையை நன்கு அறிவது போல், துன்பம் அஞ்ஞானத்தின் நேரான காரியமாதலால் துன்பத்தின் கற்பனைகளைப் பூரணமாகக் கற்று முடித்தபொழுது அஞ்ஞானம் நீங்கிவிடுகிறது; அதன் இடத்தில் ஞானம் வந்து அமருகிறது. ஆனால் கீழ்ப்படிதலில்லாத ஒரு குழந்தை தனது பள்ளிக்கூடத்துப் பாடங்களைப் படியாது, எப்பொழுதும் மடமையில் இருந்துகொண்டு மேன்மேலும் சிட்சை அடைந்து கொண்டிருத்தல் போல மனிதரிற் சிலர் துன்பங்களின்கற்பனைகளைக்கல்லாது, எப்பொழுதும் அஞ்ஞானத்தில் இருந்து கொண்டு நோயும் ஆசாபங்கமும் துக்கமுமாகிய சிட்சைகளை மேன்மேலும் அடைந்து கொண்டிருத்தல் கூடும். எவன் தன்னைச் சூழ்ந்திருக்கிற துன்பத்தினின்று நீங்கிக்கொள்ள விரும்புகிறானோ அவன் துன்பத்தின் கற்பனை களைக் கற்றுக் கொள்வதற்கு விருப்பமுடையவனாகவும் கடுமையான முயற்சி செய்யத் தயாராகவும் இருத்தல் வேண்டும். ஏனெனில் கடுமையான முயற்சியின்றி ஞானத்தையாவது சாந்தியையாவது நிலையான சுகத்தையாவது ஒரு சிறிதும் அடைய முடியாது.

ஒரு மனிதன் ஓர் இருட்டறைக்குள் போய் அதன் கதவை அடைத்துக்கொண்டு உலகத்தில் ஒளியென்பதே இல்லை யென்று சொல்லலாம்; ஆனால் ஒளி வெளியில் எங்கும் நிறைந்திருக்கிறது,

இருள் அவனுடைய சிறிய அறையுள் மாத்திரம் இருக்கிறது. அப்படியே, நீங்களும் மெய்ப்பொருளின் ஒளி உங்கள்மீது படாமல் மறைத்துக்கொள்ளலாம்; அல்லது உங்களைச் சூழ்ந்துகொண்டிருக்கிற வெறுப்பு, சுய நயம், பாவம் முதலிய மதில்களை இடித்துச் சர்வவியாபகமான பேரொளியைக் காணற்குத் தொடங்கலாம்.

நீங்கள் உங்களை உண்மையோடு ஆராய்ந்து பார்த்து, துன்பமானது கழிந்துபோகும் ஒரு நிலைமையென்றும், அஃது உங்களால் உண்டு பண்ணப்பட்ட தென்றும், உங்களுடையசகல கேடுகளும், துன்பங்களும் துக்கங்களும், சிறிதும் பிழையாத ஒரு சட்டப்படி உங்கள்பால் வந்திருக்கின்றனவென்றும், அவற்றை நீங்கள் விரும்புவதாலும் அவற்றை அடைவதற்கு நீங்கள் அருகர்களான தாலும் அவை உங்களைச் சார்ந்திருக்கின்றனவென்றும், அவற்றை முன்னர் அநுபவித்துப்பின்னர் அறிவதால் நீங்கள் மிக்க பலமும் ஞானமும் மேம் பாடும்அடைவீர்களென்றும் நீங்கள் அபரோட்சமாக அறியுங்கள். அவ்வபரோட்ச ஞானத்தை நீங்கள் பூர்த்தியாக அடைந்தபொழுது நீங்கள் உங்கள் நிலைமைகளைத் திருத்திக் கொள்ளவும், சகல துன்பங்களையும் இன்பங்களாக மாற்றிக் கொள்ள வும், உங்கள் ஊழை விலக்கிக்கொள்ளவும் வல்லவர்களாவீர்கள்.

(‘தமிழ்ப்பாடத் தொகை’ 1930 மார்ச் - சாமி சிதம்பரனார்
தொகுத்தது பக் 26 முதல் - 34 வரை)

தோலும் நிறமும்

தோலின் அதிசயங்கள்

சரீரத்தின் தோல் இரண்டு வெவ்வேறு அடுக்காக இருக்கிறது. வெளியிலிருக்கிற தோல் பொய்த்தோல் அல்லது புறத்தோல் என்று சொல்லப்படுகிறது, உள்ளே இருக்கிற தோல் மெய்த்தோல் அல்லது அகத்தோல் என்று சொல்லப்படுகிறது. தோலானது நரம்புகளையும் இரத்த நாடிகளையும் ஏராளமாகக் கொண்டிருக்கிறதை நாம் எல்லாரும் நமது தோலின் வேதனை அநுபவத்தால் அறிகிறோம். அந்நரம்பு நாடிகளால் தான் ஸ்பரிஸ உணர்ச்சியும் வேதனை உணர்ச்சியும் உண்டாகின்றன. அது சுவாசாசயத்தையும் மூத்திரப் பிண்டத்தையும் போல இரத்தத்தைச் சத்தி செய்யும் ஓர் உறுப்பு. அதனுடைய வேலைகள் இருபத்தெட்டு மைல் நீளமுள்ள கழிகால்கள் அல்லது குழாய்கள் மூலமாகச் செய்யப்படுகிறதாகக் காலஞ்சென்ற **ஸர். இராஸ் மஸ் வில்ஸன்** என்பவர் கணக்கிட்டிருக்கிறார். இக் கீர்த்தி பெற்ற சர்ம சாஸ்திரி ஒரு சதுர அங்குலத்தில் 2800 குழாய்கள் இருப்பதாகவும் ஒவ்வொரு குழாயும் கால் அங்குலம் நீளம் இருப்பதாகவும் கண்டு அவருடைய ஆச்சரியமான கணக்கை வெளியிட்டிருக்கிறார். இக்கணக்குப்படி நமது சரீரத்தின் ஒவ்வொரு சதுர அங்குலத்திற்கும் 700 அங்குல நீளம் குழாய்கள் இருக்கின்றன. சாதாரண அளவுள்ள ஒரு மனிதனுடைய சரீரத்தில சுமார் 2500 சதுர அங்குலங்கள் இருக்கின்றன. ஆதலால் 1,750,000 அங்குலம் நீளமுள்ள(2800+2500) 7,000,000 கழி குழாய்கள் இருக்கின்றன. 1,750,000 அங்குலம் அல்லது 145,833 அடி; அல்லது 48611 கெஜம் அல்லது சிறிது குறைய இருபத்தெட்டு மைல் ஆகின்றது.

தோலிற்கும், அழகு ஆரோக்கியங்களுக்குமுள்ள சம்பந்தம்

தோல் சரீரத்தின் மிக மிக முக்கிய உறுப்புகளின் ஒன்று அது

செய்கிற பல வகையான வேலைகள், ஆரோக்கியமும் ஆயுளுமாகிய இரண்டிற்கும் இன்றியமையாதவை. நாம் ஜீவித்திருத்தற்குத் தோலைப் போல இரைக்குடலும் சுவாசாசயமும் மூளையுங் கூட அவ்வளவு அவசியமானதல்ல. மனிதர் சாப்பாடில்லாமல் ஒரு வாரத்திற்கு மேல் ஜீவித்திருக்கக்கூடும். சுவாசாசயம் தனது வேலையைச் சிறிதும் செய்து நின்றுவிட்ட பின்னரும் பல நாள் மனிதர் சாவாமல் இருக்கக் கூடும். ஆனால்,தோலின் வேலைகளைக் கெடுத்துவிட்டால், ஒரு சில மணிகளுக்குள் மரணம் வந்துவிடும். **பத்தாம் லியோ** ரோமாபுரியின் குருவான சமயத்தில் **பிளாரன்ஸ்** நகரின் தெருக்களில் ஒரு பெரிய ஊர்கோலம் நடந்தது. அப்பொழுது பொற் பருவம் என்பதைக்காட்டும் பொருட்டு ஒரு குழந்தையின் சரீரம் முழுவதையும் பொன் இலையால் போர்த்து வைத்திருந்தார் கள். அக்குழந்தை, பார்த்தவர்கள் திகில் அடையும்படி பலமான வரிப்புகளால் ஒரு சில மணிகளுக்குள் இறந்துவிட்டது. தோலின் துவாரங்களை அடைத்து வியர்வை வெளியேற்றத்தை நிறுத்தி விட்டதாலேயே இக்குழந்தை மரணம் அடைந்ததென்பதற்குச் சந்தேகம் இல்லை. ஸ்நானத்தால் அல்லது சரீரப் பயிற்சியால் தோலைச் சுத்தமாக வைத்தலை நாம் அசட்டை செய்வோமாயின், முன் சொல்லிய இருபத்தெட்டு மைல் நீளமுள்ள கழி குழாய்களையும் நாம் அடைத்துவிடுகிறோம். இச்செயலிற்குச் சிக்ஷையில்லாமல் போகாது. இச்செயலின் நேரான பலன்களாக ஆரோக்கியமின்மை யையும் மரணத்தையும் உண்டுபண்ணும் அபாயகரமான வியாதிகள் உண்டாகின்றன. தோலின் வெண்மையும், ஒளியூடுருவலும் நிறமும் அழகிற்கு முக்கிய அம்சங்களாக எப்பொழுதும் கருதப்படுகின்றன. முகத்தின உறுப்புகள் எவ்வளவு பூரணமாக அமைந்திருந்த போதிலும் தோல் நிறம் கெட்டதாகவாவது தேமல் கொண்ட தாகவாவது இருக்கும் பக்ஷத்தில் சகல வசீகரமும் நீங்கிவிடுகின்றது. தோல் சிலந்திகளாலும் பருக்களாலும் சுருங்கல்களாலும்

மறுக்களாலும் பழுதாக்கப்பட்ட பொழுது அழகும் சற்றேறக்குறைய நீங்கிவிடுகின்றது. தோலின் தன்மையும் நிலைமையும் நிறத்தை ஆள்கின்றது. தோற்றத்தின் அழகைப் பெரும்பாலும் நிறம் ஆள்கிறது. அழகிய நிறத்தோடு கூடியுள்ள ஒரு அவலக்ஷணமான முகத்தை யாராவது எப்பொழுதாவது பார்த்திருப்பதுண்டா? தெளிவான நிறத்தையும் சிவந்த கன்னங்களையுமுடைய சாதாரண முகங்களும் உண்டு. ஆனாலும் அவை பார்ப்பதற்கு எப்பொழுதும் இன்பகரமாயிருக்கின்றன. முக்கிய உறுப்பாகிய தோலைப் பாதுகாக்கும் பொறுப்பு விலை மதிப்பற்ற புறத்தோலைக் கொண்டுள்ள ஒவ்வொருவரையும் சேர்ந்தது. அழகை அடைவதற்கு ஆசிக்கிறவர்கள் அதனை இடைவிடாது கவனித்துக் கொண்டு வரவேண்டும்.

மனோசலனம் தோலிற் செய்யும் காரியம்

சில மனோசலனங்கள் குளிர்போலவே தோலைத் தளர்ச்சியாக்கி அதன் தொழில்களையும் பாதிக்கின்றன. தளர்ச்சியை உண்டு பண்ணும் வியசனம், பயம் முதலிய மனோசலனங்கள் சுவாச ஓட்டத்தையும் இரத்த ஓட்டத்தையும் குறைக்கின்றன; தோலின் நிறத்தை மங்கச் செய்கின்றன; வியர்வையைத் தடுக்கின்றன; நரம்பின் தொழிலைக் கெடுக்கின்றன. கோபமும் மற்றைய கொடிய மனோ சலனங்களும் சுவாஸ ஓட்டத்தையும் இரத்த ஓட்டத்தையும் விரைவு படுத்தித் தோலின் சூட்டை அதிகமாக்கிக் கோபக் குறிகளான முகச்சிவப்பையும் முகக்கனப்பையும் முக விறைப்பையும் உண்டுபண்ணுகின்றன. மனோ சலனங்கள் தோலிற் செய்யும் காரியம் சில வேளைகளில் வியாதிகளைக்கூட உண்டுபண்ணத் தக்க அவ்வளவு பெரிதாயிருக்கின்றது.

பலத்த மனோசலனங்கள் முக்கியமாக வியசனமும் பயமும் தோலின் ஒழுங்கீனங்களையும் வியாதிகளையும் உண்டாக்குகின்றன.

சில சமயங்களில் பயத்தாலும் வியசனத்தாலும் ஜன்னியும் சுரமும் உண்டாகின்றன. **வில்க்கின்ஸன்** தோலைப்பற்றிப் பின் வருகிறபடி சொல்லுகிறார் "அன்பானது தனது சிவப்பு நிறத்தை உண்டு பண்ணுகின்றது. அன்போடு பொருந்திய நாணம் பிரகாசத்தை நல்குகின்றது. தாழ்ந்த வெட்கம் மண்ணின் நிறத்தைக் கொடுக்கின்றது; வெறுப்பு தனது மங்கல் நிறத்தை உண்டு பண்ணுகின்றது. பொறாமை தனது பச்சை நிறத்தை நல்குகின்றது; கோபம் கறுப்பு நிறத்தை உண்டுபண்ணுகின்றது. ஏக்கம் இறந்து போனவர்களது வெளுத்த நிறத்தை அளிக்கின்றது. கபடம் மற்றைய நல்லனவற்றையெல்லாம் கவர்ந்துகொண்டு தீயனவற்றையெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாகக் கொடுக்கின்றது. துக்கமும் துன்பமும் தோலை முரடாக்குகின்றன. விவேகமும் அறிவும் தமது அழியாத கிரணங்களால் தோலிற்குப் பரிசுத்தமான ஒளியை நல்குகின்றன. சுருக்கமாகச் சொல்லின், தோலின் எண்ணிறந்த தோற்றங்களில் ஒவ்வொன்றும் மனித சுபாவத்தைக் காட்டுங் கருவியேயாகும்.

சீதோஷ்ணங்களும் அவற்றின் மாற்றங்களும் தோலிற் செய்யும் காரியம்

நல்ல அழகிய நிறத்தை விரும்புகின்றவர் சூரியனுடைய மிக உஷ்ணமான கிரணங்கள் நேரில் தம் மீது விழாதபடி தம்மைக் காத்துக்கொள்ள வேண்டும். எரிகின்ற சூரியனது சக்தியால் தோல் உலர்ந்தும் முரடாகியும் போம்; சில சமயங்களில் தடித்தும் வெடித்தும் போம். சீகம் முதலில் தோலில் செய்யும் காரியம் சுருங்கல்களை உண்டு பண்ணுதலே. தோல் சுருங்கியவுடன் இரத்தக் குழாய் நாடிகளுக்குள் எவ்வளவு இரத்தம் இயல்பிற் செல்லுமோ அவ்வளவிற்குக் குறைந்து செல்கின்றது; உஷ்ணத்திற்கும் உயிருக்கும் ஆதாரமான பெரிய மத்திய ஸ்தலங்களிலிருந்து தூரத்திலுள்ள பாகங்களுக்குச் செல்கின்ற இரத்தத்தின் அளவும்

குறைகின்றது; அவற்றால் நம்மெல்லோருக்கும் அநுபவமாயுள்ள நரம்புத் திமிர் உண்டாகின்றது. ஆனாலும் இக் காரியங்கள் ஸ்திரமானவையல்ல சிறிது காலங் கழித்து இவற்றிற்கு எதிரான காரியங்கள் நிகழ்கின்றன. அப்பொழுது முன் தடை செய்யப்பட்ட இரத்தம் அதிக விரைவாகத் திரும்புகின்றது. அது தோலின் ஒரு பளபளப்பான சிவப்பு நிறத்தை உண்டுபண்ணுகின்றது. இந்நிறம் பனிக் காலத்தில் மிகத்தூரம் நடந்தவர்களுடைய முகத்தில் தோன்றும் பளபளப்பான சிவப்பு நிறத்தை ஒத்திருக்கும். சீதம் வாயு மண்டலம் உலர்ந்திருக்கும் பொழுது ஆரோக்கியமுள்ள மனிதருக்கு, முக்கியமாக அதிகத் தேக அப்யாசம் செய்தவருக்கு, மிக லாபகரமானது. ஆனாலும் நனைந்த வாயு சரீரத்தில் வேறுவிதமான வேலை செய்கின்றது. அது சரீரத்தில் படுங்காலையில் சரீரம் அதிக அளவு ஈரத்தை கவர்ந்து அதிக கனமாகின்றது. அதன் சக்தியால் தோலின் நிறம் மிகுதியும் பாதிக்கப்படுகின்றது உலர்ந்து தேய்ந்து ஜனங்களின் நிறத்தைப் போன்றதாகின்றது. நனைந்த சீதம் சகல சீதோஷ்ணங்களினும் மிக மிகக் கெட்டது. அது சகல சரீரப் பிரகிருதிகளுக்கும் இளையோரானாலும் சரி, முதியோரானாலுஞ்சரி தீங்கை விளைக்கின்றது. மழை காலத்தில் ஒவ்வொரு தினமும் வாயு நனைவில்லா திருக்கும்போது திறந்த வெளியிடங்களில் சரீரப்பியா சங்கள் செய்ய வேண்டும். சீதோஷ்ண மாற்றங்கள் தோலிற்செய்யும் காரியங்களில் ஒன்றினின்று மற்றொன்றிற்கு விரைந்து செல்லும் மாற்றமே எப்பொழுதும் அபாயகரமானது. சீதத்திலிருந்து உஷ்ணத்திற்கு மாறுதல், உஷ்ணத்திலிருந்து சீதத்திற்கு மாறுதலைப் போல அவ்வளவு அபாயகரமானதன்று. உஷ்ணத்திலிருந்து சீதத்திற்கு மாறுதல் வியர்வையை வெளியேற்றும் தோலின் வேலையைத் தடைப்படுத்துகின்றது. அதனால் சில சமயங்களில் நாசி தொண்டை முதலியவற்றின் ஜவ்வுகளில் எரிச்சல் உண்டாகின்றது. நாமாக உண்டுபண்ணிக்கொள்ளும் சீதோஷ்ண மாற்றங்களை,

உதாரணமாக ஒரு உஷ்ணமான படுக்கை அறையிலிருந்து ஒரு குளிர்ந்த இராத்திரியில் வெளியில் செல்லல் போன்றவைகளை, நாம் அதிக ஜாக்கிரதையோடு நீக்க வேண்டும். அவை உண்மையில் வாயு மண்டலத்தின் இயற்கை மாற்றங்களைப் பார்க்கிலும் அதிக அபாயகரமானவை. உஷ்ணத்திலிருந்து சீதத்திற்கும் உலர்ந்த காற்றிலிருந்து நனைந்த காற்றிற்கும் மாறி மாறிச் செல்கின்ற ஒரு மனிதனுடைய சரீரத்தின் புறத்தோல் முரடாகும் அல்லது வெடித்துப்போகும்.

('பாரதி' 1930 ஜுலை மாலை 2 மணி 7 பக்கம் 526 - 530.)

உலகமும் கடவுளும்

அணு என்பது உருவப் பொருளாகிய உலகப் பொருளின் மிக மிக சிறிய கூறு. உலகப் பொருள் ஒவ்வொன்றும் அணுக்களின் சேர்க்கை என்று சொல்லப்டுகிறது. ஆனால், அணுக்கள் சேர்ந்து ஒவ்வோர் உலகப் பொருளும் உண்டானதை எவரும் பார்த்ததில்லை. உலகப் பொருள்கள் அணுக்களாகப் பிரிக்கப்படுதலையும் பிரிக்கப் படக் கூடுமென்பதையும் பார்த்து அவை அணுக்களின் சேர்க்கையால் உண்டாயின எனச் சொல்லுகின்றனர், உலகப் பொருள் ஒவ்வொன்றும் அணுக்கள் சேர்ந்துதான் உண்டாகின்றதா அல்லது வேறு வழியில் உண்டாகின்றதா என்பதைப் பற்றி ஆராயின், அவை அணுக்களின் சேர்க்கையால் உண்டாகின்றனவென்று சொல்ல முடியாது. இவ்வுலகத்திலுள்ள புல்லும், மரமும், முட்டைக்குஞ்சும், பிராணியும் தாம் உட்கொள்ளும் உணவுகளால் உண்டாகின்றன, வளர்கின்றன, பருக்கின்றன என்று தெரிகிறது. அவ்வாறிருக்க, அவை அணுக்களின் சேர்க்கையால் உண்டாகின்றன; வளர்கின்றன. பருக்கின்றன என்று நாம் எவ்வாறு சொல்லக்கூடும்? மேல் நாட்டு தத்துவ சாஸ்திரிகள் சொல்லுவனவெல்லாம் உண்மையென்று நாம் கொள்ள வேண்டுவது அவசியமா? அஃது எவ்வாறாயினும் ஆகுக; உருவப் பொருளாகிய உலகப் பொருள்கள் அணுக்களாகப் பிரிக்கப்படுதல் கூடும் என்பது நமக்கும் பிறருக்கும் ஒப்பமுடிந்த ஒன்று.

உருவப் பொருளாகிய உலகப் பொருள் ஒவ்வொன்றம் அணுக்களாகப் பிரிதல் போல, அருவப்பொருளாகிய கடவுளும் அணுக்களாகப் பிரிதல்கூடும். புல், மரம், முட்டைக்கரு, பிராணி ஒவ்வொன்றிலும் வளர்கிற சக்தி இருக்கிறது அச்சக்தியின் காரியமாகிய வளர்ச்சி, நமது பார்வைக்குப் புலப்படுவதாயினும் அச் சக்தி நமது பார்வைக்குப் புலப்படுவதில்லை. ஆனால், அச்

சக்தியானது புல் மரம் முட்டைக்கரு, பிராணி இவற்றின் ஒவ்வோர் உருவ அணுவிலும் இருக்கிறதென்பது யாவர்க்கும் ஒப்பமுடிந்த தொன்று. ஒவ்வோர் உருவ அணுவும் வெவ்வேறென்றால், அதனதனுள் இருக்கும் வளர்ச்சி சக்தியாகிய ஒவ்வோர் உருவ அணுவும் வெவ்வேறு என்பதற்கு தடையாது?

கடவுளின் அணு உயிராதல் அல்லது உயிரற்ற பொருளாதல் கூடும். உயிர் என்பது 'யான்' என்னும் நினைப்போடு கூடிய அறிவு. கடவுள் என்பது 'யான்' என்னம் நினைப்பற்ற அறிவு'! ஆகவே கடவுளின் அணு 'யான்' என்று நினைத்தமையால் உயிர் ஆயிற்று. சர்வ சக்தியையும் சர்வ ஞானத்தையும், சர்வ வியாபகத்தையும் இழந்தது. உயிராகிய கடவுளின் அணு 'யான்' என்ற நினைப்பே விடவே சர்வ சக்தியும், சர்வ ஞானமும், சர்வ வியாபகமும் உடைய கடவுளாகும். அறிவு 'யான்' என்று ஏன் நினைத்தது? சிலர் வினாவுகின்றனர். அவ்வினாவிற்கு விடை 'யான்' என்று நினைப்பது அறிவணுவுக்கு இயல்வு என்பதே.

கடவுள் அனாதியாதலால் கடவுளின் அணுக்களம் அநாதியேயாம். கடவுள் ஒருவரே; கடவுளின் அணுக்கள் எண்ணிறந்தவை. கடவுளின் ஒவ்வோர் அணுவும்'யான்' என்று நிறைக்கும் இயல்புள்ள தால் கடவுளின் சில அணுக்கள் அநாதியாகவே உயிர்களாயிருத்தல் கூடும். ஆதலால். உயிர்கள் அநாதி என்று ஒரு சாரர் கூறுதலில் நமக்கு ஆட்சேபம் இல்லை, ஆனால் கடவுள் போல உயிர்களும் அந்த மற்றவை என்றும் உயிர்கள் முத்தி நிலையிலும் கடவுளோடு கூடித் தனித்தனியே இன்புற்றிருக்கும் என்றும் கூறுதலில்தான் நமக்கு ஆட்சேபம் உண்டு. 'யான்' என்று நினைக்கும் அறிவணுக்கள் பல நினைப்பை விடுத்தபின் அவ்வறி வணுக்கள் ஒன்றே யாம். அவ்வுண்மை பற்றியே திருமூலரும் 'சீவனெனச் சிவனென்ன வேறில்லை; சீவனார்

சிவனாரை யறிகிலர்; சீவனார் சிவனாரையறிந்தபின், சீவனார் சிவனாயிட்டிருப்பாரே' என்று திருவாய் மலர்ந்தருளினார். ஆதலால், உயிர்கள் வெவ்வேறாய் பலவாயிருப்பினும், அவை கடவுளை யுணர்ந்த பின் கடவுளோடு ஐக்கியமாய் கடவுளேயாகி நிற்கும்.

தைத்ரீய உபநிஷத், பிரமவல்லி 'அந்தப் பரமாத்மா அநேக பொருள்களாக வேண்டும் என்று இச்சித்தார்; (அந்த இச்சையாகிய) சங்கற்பத்தைச் செய்து இவ் வுலகமெல்லாவற்றையும் சிருஷ்டித்தார்' என்று கூறுகிறது. இதனாலும் கடவுளதுசங்கற்பத்தாலே உயர்திணைப் பொருள்களும், அஃறிணைப் பொருள்களும் அடங்கிய உலகம் தோன்றிற்று என்பது விளங்குகிறது. கடவுளுக்கு ஏன் சங்கற்பம் உண்டாயிற்று' என்று வினாவுதல் அசம்பாவிதம் என்பதைச்சென்ற டிசம்பர் மாதத்தில் தூத்துக்குடி 'கால்டுவெல்ஹைஸ்கூல் மாகஸைன்' பத்திரிகையில் வெளிவந்த 'கடவுளைப்பற்றிய ஒரு வினா' என்னும் தலைப்பெயரிய கட்டுரையில் நிரூபித்துள்ளேன். இப்பொழுது அவ்வினாவிற்கு ஒரு விடையளிக்கவும் முற்படுகிறேன். அஃதாவது, ஏகமான கடவுள் அநேகமாக இச்சித்தல் இயல்பு என்பதே. ஒரு பொருளுக்கு ஒன்று இயல்பென்று சொல்லிய பின்னர், அப்பொருளுக்கு அவ்வியல்பு எப்படி வந்தது? என்று வினாவுதல் இழுக்கு. ஆதலால், பொறிகளுக்குப் புலப்படாத அறிவாகிய ஏகமான கடவுளே, பொறிகளுக்குப் புலப்படும் ('அறிவுள்ளனவும் அறிவற்றனவுமாகிய') பல பொருள்கள் அடங்கிய உலகமாகத் தோன்றுகிறார் என்று அறிக.

(17.1.1936 தினமணி
1994 தினமணி வைரவிழா மலர் பக்.204)

செ. திவான் எழுதிய நூல்கள்

வெளிவந்தவை

- தக்கலை ஞானமாமேதை பீர்முகம்மது (ரஹ)
  சரித்திரமும் , ஞானப்பாடல்களும்
- விடுதலைப்போரில் தமிழக முஸ்லிம்கள்
- திருகுர்ஆன்: தமிழில் விளக்கம் தந்த அறிஞர்கள்.
- கலைஞரை வென்ற வை.கோ.
- உண்மையின் சவுக்கடி
- வாகை சூடி வரும் வை.கோ.

பதிப்பித்தவை

- வ.உ.சி.யின் 'அழகும் ஆரோக்கியமும்'
- வ.உ.சி.யின் 'அரசியல் பெருஞ்சொல்'
- வ.உ.சி.யின் 'துன்பத்தின் கற்பனை'

வெளிவர இருப்பவை

- வரலாற்றின் வெளிச்சத்தில்
  மாமன்னர் ஔரங்கஜேப்
- வீரத்தலைவர் வ.உ.சி.
- மாவீரர் மருதநாயகம் கான்சாகிப்
- பழம்பாடல்களில் பாண்டியரின் புதிய சரிதை,
- சுதந்திரப்போரில் முஸ்லிம்கள்....
- விடுலைப்போரில் தீவிரவாதம்
- ம(னி)த ஒற்றுமை.



“தமிழ்த்தாத்தா உ.வே.சா
கால்கள் தேய கவின்
தமிழக மெங்கும் நடந்து
பழந்தமிழ்ச் சுவடிகளை
தேடிப்பாதுகாத்து தந்தது
போல் இந்த இலட்சிய
இளைஞனும் வரலாற்றின்
சாட்சியங்களையும்
குறிப்புக்களையும் தேடித் தேடி
சேகரித்து தன்னையே ஒரு
கருத்துப் பெட்டகமாக
செய்திக் களஞ்சியமாக ஆக்கிக் கொண்டார்.”

‘விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள்’ அணிந்துரையில்

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

‘காணக்கிடைக்காத அறிவுக் கருவூலமாகத்
திகழும் திவானைப் பேணிக்காத்தும்
பெரும்பயன் பெற வேண்டியது
தமிழுலகின் தலையாயக்
கடமையாகும்’

‘திருகுர்ஆன் தமிழில் விளக்கம்
தந்த அறிஞர்கள்’ நூலின்
அணிந்துரையில் மறுமலர்ச்சி
தி.மு.கழகப் பொதுச்செயலாளர்
வை.கோ